டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 5.11.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 116 | Madurai | Online Edition

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை 'தூய்மைக்கான சிறப்பு இயக்கம் 6.0'-ஐ வெற்றிகரமாக நிறைவு செய்தது

புது தில்லி, நவ.4

கடந்த அக்டோபர் 2 முதல் 31 வரை நடத்தப்பட்ட தூய்மைக் கான சிறப்பு இயக்கம் 6.0-ல் மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, தீவிரமாகப் பங்கேற்றது. அரசு அலுவலகங்களில் தூய்மையை ஒரு நடைமுறையாக நிலைநிறுத்துவதையும், நிலுவையில் உள்ள பணிகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

சுமார் ஒரு மாத காலம் நடைபெற்ற இந்த இயக்கத்தின்போது, நிர்ணயிக்கப்பட்ட 189 என்ற எண்ணிக்கைக்கு எதிராக 250 குறைகள் தீர்த்து வைக்கப்பட்டன. 16,707 இயல் கோப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டு, 10,710 கோப்புக்கள் நீக்கப்பட்டன. மேலும், ஆய்வு செய்யப்பட்ட 2,171 மின்னணு கோப்புக்களில், 1,327 கோப்புகள் முடித்துவைக்கப்பட்டன. பயன்படுத்தப்படாத பொருட் களை அகற்றியதன் மூலம் ரூ.25,93,896 வருவாய் ஈட்டப்பட்டது.



PACCS உர விற்பனையாளர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி!



விருதுநகர், நவ.4

வேளாண்மைத்துறை சார்பில், விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் (PACCS) உர விற்பனையாளர்களுக்கான விழிப்புணர்வுப் பயிற்சி 3.11.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை அலுவலர்கள் கா.அரிபுத்திரன் மற்றும் குருலட்சுமி ஆகியோர் வழங்கினர்.

பயிற்சியில், விவசாயிகளுக்கு உரங்களை முறையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் விநியோகம் செய்வதற்கான டிஜிட்டல் உர விற்பனை நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, விவசாயிகளின் ஆதார் எண் மற்றும் OTP மூலம் அடையாளச் சரிபார்ப்பு செய்தல், விவசாயிகளின் நில விவரங்களைப் பதிவு செய்தல், சாகுபடி செய்யப்படும் பயிர்களின் விவரங்களை உள்ளீடு செய்தல், பயிர் மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையில் உரங்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட அளவுகளைத் தேர்வு செய்தல் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், யூரியா, டிஏபி, பொட்டாஷ் உள்ளிட்ட உரங்களின் தேவையான அளவுகளைப் பதிவு செய்தல், உர விற்பனையாளர் மற்றும் உரம் பெறுபவரின் விவரங்களை உள்ளீடு செய்தல், QR குறியீடு மற்றும் டோக்கன் உருவாக்குதல், அதன் மூலம் விவசாயிகளுக்கு உரங்களை வழங்குதல் போன்ற செயல்முறைகள் குறித்தும் செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

டிஜிட்டல் முறையில் உர விநியோகத்தை மேற்கொள்வதன் மூலம் உர விற்பனையில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துதல், விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்தல் மற்றும் உர இருப்பு, விநியோகம் ஆகியவற்றை முறையாகக் கண்காணித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

இப்பயிற்சியில் வத்திராயிருப்பு மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரங்களைச் சேர்ந்த PACCS உர விற்பனையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியின் முக்கிய அம்சங்கள்

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ளவிழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நாள் மற்றும் நேரம் : 6.11.26 (வெள்ளிக்கிழமை) காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி எண் : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

நெல் வரப்பில் பயறுவகை பயிர்கள் சாகுபடியும் தரமான விதைதேர்வும்



திருவாரூர், நவ.4

திருவாரூர் மாவட்டத்தில் நெல் வயல்களில் உள்ள வரப்புகளில் வரப்பு பயிராக துவரை, உளுந்து, பாசிப்பயிறு மற்றும் தட்டைப்பயிறு ஆகிய பயறுவகை பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு சாகுபடி செலவில்லாமல் வீட்டுக்கு தேவையான உளுந்து, துவரை, பாசிப்பயிறு மற்றும் தட்டைப்பயிறு வகைகளை உற்பத்தி செய்து கூடுதல் வருமானம் பெறலாம். மேலும் வரப்பு பயிர் மூலம் நெல் பயிருக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. பயறு வகை பயிர்களின் வேர் முடிச்சுகள் மூலம் வளிமண்டல தழைச்சத்தினை மண்ணில் நிலை நிறுத்தி, நெல் வயலின் மண்வளத்தை அதிகப்படுத்து கிறது. வரப்பு தூய்மையாக களைகள் இல்லாமல் பராமரிக்கப் படுவதால் களைகள் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன.

வரப்பில் சாகுபடி செய்யப்படும் பயறுவகை பயிர்களில் நெற்பயிரை தாக்காத அசவினிகள் தோன்றும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்பட்டு, இப்பொறி வண்டுகள் நெற்பயிரினைத் தாக்கும். சாறு உறிஞ்சும் பூச்சிகளைத் தாக்கி அவற்றைக் கட்டுப்படுத்தும். மேலும் பயறுவகை பயிர்களில் மஞ்சள் நிற வண்ண மலர்களால் ஊண் உண்ணிகளான குளவி இனங்கள், ஒட்டுண்ணிகள் கவரப்பட்டு அவைகள் நெற் பயிரினை தாக்கும் தண்டு துளைப்பான் மற்றும் இலைச்சுருட்டு புழு ஆகியவைகளை கட்டுப்படுத்தும்.

நெல் வரப்பில் பயிறு வகை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் அதற்கேற்ற ரகங்களையும், முளைப்புதிறன் மிக்க தரமான விதைகளையும் பய்னபடுத்தவேண்டும். துவரையில் குறைந்த வயதுடைய வம்பன்-1, பிஎஸ்ஆர்-1, எபீகே-1, வம்பன்-3 ஆகிய ரகங்களும், உளுந்து பயிரினை பொறுத்தவரை டீ-9,

வம்பன்-3, எடீடி-5, வம்பன்-4, வம்பன்-9, வம்பன்-10 வம்பன்-11, கோ-6 ஆகிய ரகங்களும் பச்சை பயிரினை பொறுத்தவரை வம்பன்-1, வம்பன்-4, கோ-8, ஆகிய ரகங்களும் தட்டைப் பயிரினை பொறுத்தவரை கோ-6, பையூர்-1, வம்பன்-2, ஆகிய ரகங்களும் வரப்பு பயிராக ஏற்ற ரகங்களாகும். நெல் வரப்பில் ஒரு எக்டருக்கு 2-3 கிலோ உளுந்து, பாசிப்பயிறு அல்லது தட்டைப்பயிறு விதைகளை வரப்பின் ஓரத்தில் மூன்றில் ஒரு பங்கு உயரத்தில் விதைக்கலாம். துவரை பயிரினை பொருத்த மட்டில் 2 கிலோ விதையினை வரப்பின் ஓரத்தில் விதைக்கலாம்.

வரப்பில் விதைக்கும் பயறு வகைப்யிர்களின் ரகத்தை அறிந்த விவசாயிகள் விதையின் தரத்தை அறிந்து விதைப்பது மிகவும் அவசியம்.

இந்திய குறைந்தபட்ச விதைச்சான்றுத் தரங்களின்படி பயறு வகைப்பயிர்களுக்கு 75 சதவீதம் முளைப்புத் திறன், 98 சதவீதம் புறத்தூய்மை, 9.0 சதவீதம் ஈரப்பதம் மற்றும் பிற இன பயிர்கள், ஒரு விதைக்கு 5ம், சான்று விதைக்கு ஒரு கிலோவிற்கு 10ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிற இரக விதைக்கலப்பு ஆகியவற்றை மிக துல்லியமாக அறிந்து கொள்ள விவசாயிகள் விதை பரிசோதனை மேற்கொள்ள துவரை பயிராயின் 30 கிராம் துவரை விதையும், உளுந்து பயிராயின் 150 கிராம் உளுந்து விதையும் மற்றும் பாசிபயிறுக்கு 120 கிராம் பாசிப்பயிறு விதை மாதிரியுடனும் ஒரு மாதிரிக்கு ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) கட்டணத்துடன் விதை பரிசோதனை நிலையம், எண்.15-பி, பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் அணுகி பயன்பெற அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

மேலும் விவசாயிகள் நெல் வரப்பில் பயறுவகை பயிர்களை சாகுபடி செய்து கூடுதல் வருமானமும், நெற்பயிரில் இயற்கை முறை பூச்சிக்கட்டுப்பாட்டு முறையினை ஊக்குவித்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்செய்தியினை து.சிவவீரபாண்டியன், தஞ்சை சரக விதை பரிசோதனை அலுவலர் மற்றும் திருவாரூர் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி



கடலூர், நவ.4

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 4.11.26 அன்று, ஸ்ரீ மு ஷ் ண ம் , குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தில் உள்ள பேரூர், தம்பிப் பேட்டை மற்றும் வல்லம் ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் சு.கண்ணன், முனைவர் ப.கமலக்கண்ணன் மற்றும் க.கலைச் செல்வி ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக் களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளு மாறு வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்தியமாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், நவ.4

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டாரம், தெற்கு வெங்காநல்லூர் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் 40க்கும் அதிகமான கரும்பு சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் கு.தனலட்சுமி தலைமையில் நடைபெற்றது. பயிற்சியில் விவசாயிகளுக்கு பாரம்பரிய முறைப்படி செய்யும் கரும்பு சாகுபடிக்கும் நிறுத்த நிலையான கரும்பு சாகுபடிக்கும் உள்ள வித்தியாசங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத் தார். இதில் ஒரு பரு சிவில் கருணை கரும்புகள் 5000/ஏக்கருக்கு, 5X2அடி இடைவேளி, ஊடுபயிர் சாகுபடி, சொட்டு நீர் பாசனம் ஆகிய தொழில் நுட்பங்களை கடைபிடித்து கரும்பில் அதிகமாக சொல் எடுக்க எடுத்துரைத்தார்.

மேலும் தேசிய உணவு மற்றும் சத்து பாதுகாப்பு திட்டம் கரும்பு திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு உயிரியல் கட்டுப்பாட்டு காரணியான ட்ரைக்கோ டெர்மா விரிடி 50%மானியம், கரும்பில் தோகை விரித்து பராமரிப்பு செய்யும் அளவிற்கு ரூ.4500 ஹெக்டருக்கு மானியமாக வழங்கப்படு கிறது என்பதை எடுத்துரைத்தார். மேலும் தரணி சீனி ஆலை உதவி மேலாளர் பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு ஒருபரு கருணை கொண்டு நடவு செய்யும் முறைகள் தோகை உரித்தல், இயந்திரம் மூலம் அறுவடை ஆகியவற்றைப் பற்றி தெளிவாக விளக்கம் அளித்தார். மேலும் முன்னோடி விவசாயியான ராமலிங்கம், தங்களுடைய அனுபவத்தை விவசாயிகளோடு பகிர்ந்து கொண்டார். அதில் கரும்பு சாகுபடியில் மதிப்பு கூட்டுதல், உரிய நேரத்தில் உர பயன்பாடு, நீர் மேலாண்மை குறித்து தெளிவாக விவசாயிகளிடம் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். மண்ணியல் துறையில் செயல்பட்ட தூண்டிக்காளை, விவசாயிகளிடம் மண் மாதிரி சேகரிப்பது உயிர் உரங்களை பயன்படுத்துதல் நுண்ணூட்ட உரங்களை பயன்படுத்துதல் ஆகியவை குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் ராமன், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய விவரங்கள் தெளிவாக எடுத்துக் கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாக பத்மாவதி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

விவசாயிகளுக்கான வாழைக்கன்று நேர்த்தி குறித்த வேளாண் மாணவிகளின் விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருச்சி, நவ.4

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் கீழ், மாணவிகள் வாழை சாகுபடிக்கு ஆரோக்கியமான, நோய் மற்றும் பூச்சித் தாக்குதல் இல்லாத கன்றுகளைத் தேர்வு செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி, கன்றுகளை நடவு செய்வதற்கு முன்பு கிழங்கில் உள்ள அழுகிய பகுதிகள் மற்றும் தேவையற்ற வேர்களை அகற்றி, உரிய முறையில் நேர்த்தி செய்வது குறித்து செயல்விளக்கம் அளித்தனர்.

மேலும், தரமான நடவுப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் நோய்த் தாக்குதலைக் குறைத்து, பயிரின் வளர்ச்சியை மேம்படுத்தி, அதிக மகசூல் பெற முடியும் என்பதை விவசாயி களுக்கு மாணவிகள் எடுத்துரைத்தனர். இப்பயிற்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், வாழை சாகுபடி தொடர்பான பயனுள்ள தகவல்களைப் மாணவிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டனர். மாணவிகளும் விவசாயிகளிடம் கலந் துரையாடி, அவர்களுக்குத் தெரிந்த விவசாய முறைகள் மற்றும் அனுபவங்களைப் பற்றிக் கேட்டறிந்தனர்.

விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவது எப்படி?





கன்னியாகுமரி, நவ.4

விவசாய உற்பத்தியை அதிகரிப் பதில் தரமான விதை ஒரு முக்கிய அங்கமாகும். நல்ல தரமான விதைகளின் பயன்பாடு மட்டுமே 15 சதவீதம் அதிக விளைச்சலுக்கு வழி வகுக்கிறது.

பயிர்களைத் தாக்கும் நோய்க் கிருமிகளான பூஞ்சை, பாக்டீரியா, மற்றும் நூற்புழுக்கள் விதைகள் மூலம் பரவி பெருத்த இழப்பை ஏற்படுத்துகின்றன. (எ.கா) நெற்பயிரைத் தாக்கும் செம்புள்ளி நோய், குலைநோய் மற்றும் பாக்டீரியா இலைக் கருகல் நோய் விதைகளை தாக்குவதுடன் விதை வழியாக பரவி நோயை ஏற்படுத்தும். இக்கிருமிகள் இளம் பயிர்களுக்கு நோயை உண்டாக்கி பயிர்களின் எண்ணிக்கையை குறைத்து விளைச்சல் பாதிக்கிறது. விதை மூலமாக பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை பின்பற்ற வேண்டும். தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட இரகங்களை பயன்படுத்த வேண்டும். பயிர்களை சரியான பருவகாலங்களில் விதைக்க வேண்டும். பருவம் தவறி விதைப்பதனால் பல நோய்களால் தாக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.

விதை நேர்த்தி செய்வதால் விதை முளைக்கும் போதும், நாற்றுகள், வளரும் போதும் நோய்த் தாக்காத வண்ணம் பயிர்கள் பாதுகாக்கப்படுகிறது. மேலும், மண் வழியாக நோய் பரவும் நுண்ணுயிர் காரணிகளையும் அழித்து விடுகிறது. இதனால் பயிர்கள் 20 – 25 நாட்களுக்கு நோய்த் தாக்கப்படாமல் பாதுகாக்கப் படுகிறது. சரியான முதிர்ச்சி பருவத்தில் பயிர் அறுவடை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவை விதையின் தன்மையை பாதிக்கும். இதனால் விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தலாம்.


அதிக ஈரப்பதத்தில் விதைகளை அறுவடை செய்வதனால் அவை பூசணங்கள் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும். அதனால் சரியான ஈரப்பதத்திற்கு பயிரை அறுவடை செய்வது உகந்தது.

விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன், விதை பரிசோதனை கட்டணம் ரூபாய் 80 /- செலுத்த வேண்டும். விதை மாதிரியுடன் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை, அனுப்புநர் பெயர், முகவரி & தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியினை கொடுத்து பயன்பெறுமாறு கன்னியாகுமரி, விதைப் பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் கேட்டுக்கொள்கிறார்.

விதை மாதரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப்பரிசோதனை ஆய்வகம், லூர்து அன்னை சாலை, ஜெஸந்த் மஹால் பின்புறம், புன்னைநகர், நாகர்கோவில் – 629 004.



வங்கக்கடலில் உருவான புயலுக்கு 'முரசு' என்ற பெயர் வந்தது எப்படி தெரியுமா?



வங்கக்கடலில் உருவாகி தீவிரப்புயலாக வலுப்பெற்றுள்ள 'முரசு' புயல் தற்போது ஆந்திர கடலோரப்பகுதியில் நேற்று நள்ளிரவில் கரையைக் கடந்தது. இந்த புயலுக்கு முரசு என்ற பெயர் சூட்டப்பட்டது எப்படி தெரியுமா? புயல்களுக்கு பெயர் வைக்கும் நடைமுறை எப்போது தொடங்கியது? இதற்கான விதிமுறைகளை வகுப்பது யார்? முரசு என்ற பெயரை பரிந்துரைத்தார யார்? இது குறித்த விரிவான விளக்கத்தை பார்ப்போம்.

1) புயலுக்கு பெயர் வைப்பதற்கான குழுவில் எந்தெந்த நாடுகள் உள்ளன?

புயலுக்கு பெயர் வைப்பதற்கான குழுவில், வங்கதேசம், இந்தியா, ஈரான், மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், கத்தார், சவுதி அரேப்பியா, இலங்கை தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஏமன் ஆகிய 13 நாடுகள் உள்ளன. இந்த நாடுகள் ஓவ்வொன்றும் தலா 13 பெயர்களைப் பரிந்துரைத்துள்ளன. அவற்றை ஒருங்கிணைத்து, மொத்தமாக 169 பெயர்கள் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. 13 நாடுகளும் பரிந்துரைத்த பெயர்கள் அந்த அந்த நாடுகளின் ஆங்கில பெயர்களின் அகரவரிசைப்படி பட்டியலிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நெடுவரிசையிலும் வங்கதேசம் பரிந்துரைத்த பெயரில் தொடங்கி, ஏமன் பரிந்துரைத்த பெயர் வரை வரிசையாக பயன்படுத்தப்படும். ஒவ்வொரு நெடுவரிசையில் உள்ள பெயர்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்ட பிறகு அடுத்த நெடு வரிசைக்கு செல்லப்படும்.

புயல்களுக்கு எப்படி பெயரிடப்படுகிறது?

கடலில் உருவாகும் அனைத்துக் காற்றழுத்த தாழ்வுப் பகுதிகளுக்கும் பெயரிடப்படுவதில்லை. ஒரு காற்றழுத்த தாழ்வு

மண்டலம் வலுப்பெற்று, அதன் அதிக பட்ச நிலையான காற்று வேகம் மணிக்கு 62 கி.மீ (34 நாட்ஸ்) அல்லது அதற்கு மேல் எட்டும் போது அது புயல் என்ற நிலையை அடைகிறது. அப்போது தான் அதற்கு முன்கூட்டிய தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியலிருந்து ஒரு பெயர் சூட்டப்படுகிறது.

புயலுக்கு பெயர் வைப்பதற்கான வழிமுறைகள் என்ன தெரியுமா?

1) உலக வானிலை அமைப்பு சில வழிமுறைகளை வகுத்துள்ளன. அதன்படி பரிந்துரைக்கும் பெயர்கள் அரசியல், மத நம்பிக்கை, கலாச்சாரம், பாலினம் ஆகியவற்றுடன் தொடர்பு இல்லாத வகையாக இருக்க வேண்டும்.

2) பெயர்கள் சுருக்கமாகவும் எளிதாக உச்சரிக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

3) அதிக பட்சமாக 8 எழுத்துகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு பெயரின் உச்சரிப்பும் ஒலிப்பதிவுடன், சமர்ப்பிக்க வேண்டும்.

புயலுக்கு எதற்காக பெயர் சூட்டப்படுகிறது தெரியுமா?

பெயர் என்பது அந்த புயலைத் தனியாக அடையாளம் காணவும், அது குறித்த தகவல்களையும், எச்சரிக்கை களையும் மக்களிடம் தெளிவாக கொண்டு செல்லவும் உதவும் ஒரு அடையாளம் மட்டுமே.

முரசு என்ற பெயரை பரிந்துரைத்தவர் யார் தெரியுமா?

கர்நாடக ஆய்வு மையத்தின் தலைவர் புவியரசன் தான். அவர் சென்னை ஆய்வு மையத்தில் பணியாற்றிய போது, தான் முரசு என்ற பெயரை பரிந்துரைத்துள்ளார்.

என்ன நீங்க புயலுக்கு பெயர் வைப்பதில் இத்தனை தகவல்கள் இருக்கா? எங்களுக்கு இது நாள் வரை தெரியாது என நீங்கள் கூறுவது என் காதில் கேட்கிறது? சரியா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்



சென்னை, நவ.4

இப்கோ சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளக்கிணறு கிராமத்திலும், நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலும் இப்கோ விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றன.

வெள்ளக்கிணறு கிராமத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் காய்கறி சாகுபடியில் நானோ யூரியா, நானோ டிஏபி மற்றும் தென்னை சாகுபடியில் சாகரிகா, வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், நானோ உரங்களின் பயன்கள் மற்றும் சங்கட் ஹரண் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கீழ்வேளூரில் நடைபெற்ற விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில், நெல் சாகுபடியில் நானோ யூரியா, நானோ டிஏபி, சாகரிகா, நானோ என்.பி.கே. ஆகிய வற்றின் பயன்பாடுகள், சமச்சீரான ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மேம்பட்ட சாகுபடி முறைகள் குறித்து எடுத்துரைக் கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மத்திய அரசின் துணை இயக்குநர் நைனார் முகமது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கீழ்வேளூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில் வாசன் மற்றும் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

இவ்விரு நிகழ்ச்சிகளும் விவசாயிகளிடையே நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் இப்கோ இடுபொருட்களின் பயன் பாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தின.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

மத்திய பட்டு வாரியத்தில் விஞ்ஞானி–B பதவியில் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பட்டதாரிகள்

கோயம்புத்தூர், நவ.4

பெங்களூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியமானது இந்தியாவில் பட்டு உற்பத்திக்குத் தேவையான ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு, பட்டுப்புழு விவசாயிகளின் உயிர் நாடியாகத் திகழ்கிறது. இது இந்தியா முழுவதிலும் பல்வேறு உறுப்பு ஆராய்ச்சி நிறுவனங்களைக் கொண்டுசிறப்பாக செயல் பட்டு வருகிறது. இதில் பட்டுப்புழுவியலில் 18 மற்றும் இதர துறைகளில் 18 என மொத்தம் 36 காலிப்பணியிடங்களை நிரப்பும் நோக்குடன் விஞ்ஞானிகளை பணியமர்த்துவதற்கான அறிவிப்பு 16.05.25 அன்று மத்திய பட்டு வாரியத்தின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.

மேலும், இந்த பணியமர்த்தலானது இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படுகிறது. முதலில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் மூலம் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்ற முதுமறிவியல் பட்டதாரிகள் விஞ்ஞானி–B பணிக்கு விண்ணப்பிக்க 02.03.26 முதல் 31.03.26 வரை அனுமதிக்கப்பட்டனர். அதில் தேர்வு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு 27.10.26 முதல் 30.10.26 வரை பெங்களூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியத் தலைமை யகத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் தேர்வு நடைபெற்றது. இந்த நேர்காணலில் தேர்ச்சி பெற்றவர்களின் முடிவுகள் 02.11.26 அன்று மத்திய பட்டு வாரியத்தின் வலைத் தளத்தில் வெளியிடப்பட்டது.

விஞ்ஞானி–B பணிக்கான முடிவுகள் வெளியிடப்பட்ட நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி யாக மேட்டுப்பாளையத்தில் இயங்கிவரும் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்ற பட்டுப் புழுவியல் துறை மாணவர்கள் சுமார் 9 பேர் விஞ்ஞானி–B பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பட்டுப் புழுவியல் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்பது குறைவாகவே உள்ளது என்று கூறப்பட்டு வரும் நிலையில் இத்துறையிலிருந்து 9 பட்டதாரிகள் தேசிய அளவில் நடத்தப்பட்ட விஞ்ஞானி–B பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் மற்றும் மாணவர் களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 2023 மற்றம் 2025 ஆம் ஆண்டு நடைப்பெற்ற மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி B தேர்வில், இதே துறையிலிருந்து 21 பேர் தேர்வு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் பட்டுப்புழுவியல் துறையில் இளமறிவியல், முதுமறிவியல் மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. முதுமறிவியல் மற்றும் முனைவர் பட்டம் படித்த மாணவர்கள் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் களாகவும், மத்திய பட்டு வாரியத்தின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களில் விஞ்ஞானிகளாகவும் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர். மேலும், இளமறிவியல் பயின்ற பட்டதாரிகள், தமிழ்நாடு மாநில பணியாளர்கள் தேர்வாணையம், மத்திய, மாநில வங்கி பணிகள், ஒன்றிய அரசின் குடிமைப் பணிகள் தேர்வு, மத்திய பணியாளர்கள் தேர்வாணையம் மற்றும் ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு பட்டு வளர்ச்சி துறையின் கீழ், பட்டுப்புழுவியல் துறையை சேர்ந்த 22 மாணவர்கள் உதவி இயக்குநர், உதவி பட்டு ஆய்வாளர் மற்றும் பட்டு ஆய்வாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வனத்துறை மத்திய நாற்றங்காலுக்கு வேளாண் கல்லூரி மாணவர்கள் கல்விச் சுற்றுப்பயணம்!

திருப்பத்தூர், நவ.4

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு வேளாண் பட்டப்படிப்பு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, நவம்பர் 3ஆம் தேதி திருப்பத்தூர் மாவட்டம் காவலூரில் அமைந்துள்ள வனத்துறை மத்திய நாற்றங்காலுக்குக் கல்விச் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.



இந்தப் பயணத்தின் போது நாற்றங்காலில் பல்வேறு வகையான மரக்கன்றுகள், மூலிகைச் செடிகள் மற்றும் வன மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து

மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், விதை சேகரிப்பு, விதை நேர்த்தி, நாற்றங் கால் பராமரிப்பு, நாற்று உற்பத்தி மற்றும் மரக்கன்றுகளை நடவு செய்யும் முறைகள் பற்றியும் விளக்கமாகக் கேட்டறிந்தனர்.

இச்சுற்றுப்பயணம் மூலம் வன வளங்களைப் பாதுகாப்பதன் அவசியம், மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த நடைமுறை அறிவை மாணவர்கள் பெற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



ஊரக பங்கேற்பு மதிப்பீட்டு நுட்பங்கள் குறித்த பயிற்சியில் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்



பெரம்பலூர், நவ.4 பெரம்பலூர் மாவட்டம், அம்மாபாளையம் கிராமத்தில், திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவர்கள், சு.பாபு, மு.தரணி தரன், கா.தருண், செ.கபீர்தாஸ், சு.நிர்மல் குமார், கு.ராகுல், மு.ரோஹித், ர.சாய்ராம், பா.சஷிகாந்த், கோ.சிவக்குமார் மற்றும் தி.தினகரன் ஆகியோர், கிராம தங்கல் திட்டம் (RAWE) மூலமாக களப்பயிற்சி செய்து வருகின்றனர்.

இதன் அங்கமாக, மாணவர்கள் செங்குணம் கிராமத்தில் ஊரக பங்கேற்பு மதிப்பீட்டு நுட்பங்கள் (Participatory Rural Appraisal – PRA Techniques) குறித்த பயிற்சியில் ஈடுபட்டனர். இந்நிகழ்வு மாணவர்களுக்கு கிராமப்புறச் சூழ்நிலையைப் புரிந்து கொள்வதற்கும், கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும், விவசாயிகளின் தேவைகள் மற்றும் வேளாண் பிரச்சினைகளை நேரடியாக அறிந்து கொள்வதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

இப்பயிற்சியில் மாணவர்கள் கிராம மக்களின் பங்கேற்புடன் சமூக வரைபடம் (Social Map), வள வரைபடம் (Resource Map), பருவ காலத் தரவுகள் (Seasonal Data), கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான பயிர் உற்பத்தித் திறன் போக்கு ஆய்வு (Trend Analysis) மற்றும் மக்காச்சோள சாகுபடியில் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டறி வதற்கான பிரச்சினை மர வரைபடம் (Problem Tree Analysis) ஆகியவற்றைத் தயாரித்தனர்.

இப்பயிற்சியின் மூலம் மாணவர்கள் கிராமத்தின் வளங்கள், பருவகால வேளாண் நடைமுறைகள் மற்றும் மக்காச்சோள சாகுபடியில் உள்ள சவால்கள் குறித்த தகவல்களைச் சேகரித்த துடன், விவசாயிகளின் அனுபவங்களையும் உள்ளூர் அறிவையும் வெகுவாக அறிந்துகொண்டனர்.

வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த நெல் சாகுபடி பயிற்சி



விருதுநகர், நவ.4

வேளாண்மை துறையின் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம், குன்னூர் கிராமத்தில் வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த நெல் சாகுபடி தலைப்பில் மாவட்டத்திற்குள் பயிற்சி 40 விவசாயிகளுக்கு நடத்தப் பட்டது. இப்பயிற்சி வத்திராயிருப்பு வேளாண்மை உதவி இயக்குனர் சி செல்வராணி, தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த நெல் சாகுபடியில் நெல் சாகுபடி தொழில் நுட்பங்களான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் ரசாயன உரங்களை குறைத்து இயற்கை உரங்களை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்வது குறித்தும், பாரம்பரிய நெல் சாகுபடி குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை துணை அலுவலர் பாலகிருஷ்ணன், வேளாண் விரிவாக்க மையத்தில் நடப்பாண்டில் மானியத்தில் உள்ள நெல் விதைகளை இருப்பு விவரம் குறித்தும் பாரதப் பிரதமரின் கௌரவ ஊக்கத்தொகை விவசாயிகள் பெறுவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் தொழில்நுட்பம் குறித்து எடுத்துரைக்க ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ஜோதிமணி, வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த நெல் சாகுபடி குறித்து பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது விதைகள் இருப்பு குறித்தும், மண் வளம் குறித்தும் ஒருங்கிணைந்த உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு, பருத்தி சாகுபடி தொழில் நுட்பம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் பாரதி, நெல் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள், உயிர் உரங்கள் பயன்பாடு, ஒருங்கிணைந்த உர நிர்வாகம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

கேத் பச்சாவோ அபியான் இயக்கம் – விளைநிலம் காப்போம் விழிப்புணர்வு முகாமில் வறட்சியை தாங்கும் பயிர்கள், பயிர் பல் வகைப்படுத்துதல், வேளாண் காடுகள் அமைத்தல், நுண்ணீர் பாசனம் சிறு குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் அமைத் தல், மற்றும் இயற்கை உரங்களை பயன்படுத்துதல் போன்ற பல

தொழில்நுட்பங்கள் எடுத்துரைக்கப்பட்டது. தங்கப்பழம் வேளாண் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் RAWE Programme நிகழ்ச்சியில் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு உயிர் உரங்களைக் கொண்டு நெல் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்திட செயல் விளக்கம் செய்து காட்டினார்கள்.

பயிற்சியின் முடிவில் வத்திராயிருப்பு வட்டார தொழில்நுட்ப மேலாளர் பு ஜோதி மஞ்சுளா, விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் விவசாயிகள் முன்னுரிமை பதிவின் அடிப்படையில் செயல் விளக்கங்கள், பண்ணை பள்ளிகள், பயிற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் மற்றும் விவசாய அடையாள அட்டைக்கு விவசாயிகள் பதிவு செய்வதன் அவசியம், அதற்கு தேவையான ஆவணங்கள் குறித்தும் மற்றும் பயன்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் ஜெகதீசன் குன்னூர் கிராமத்தில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். பயிற்சியின் முடிவில் விவசாயிகளுக்கு எழுந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை சுபா உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தார்.

துளிர் கீரைகள் உற்பத்தி விழிப்புணர்வு திட்டம்



தர்மபுரி, நவ.4

தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் துளிர் கீரைகள் உற்பத்தி விழிப்புணர்வு திட்டம் நடைபெற்றது. இத்திட்டத்தை வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் வெண்ணிலா இணைப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கத்துறை) துவக்கி வைத்தார். முனைவர் இந்துமதி இணைப் பேராசிரியர் (தோட்டக்கலை துறை) துளிர் கீரைகள் மற்றும் அதன் உற்பத்தி பற்றி விளக்கமளித்தார். மேலும் துளிர் கீரைகளின் வளர்ச்சி நிலைகள் பற்றியும், ஊட்டச்சத்து நன்மைகள் பற்றியும் அதில் வரும் சவால்களை எதிர்கொள்வது பற்றியும் விவரமாக விளக்கினார். இந்த திட்டத்தில் விவசாயிகள், தொழில் முனைவோர்கள், வேளாண் மற்றும் தோட்டக்கலை மாணவிகள் பங்கேற்றனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் துளிர் கீரைகள் உற்பத்தி பற்றிய செயல்முறை விளக்கத்தை முனைவர் இந்துமதி விளக்கினார். இந்நிகழ்வில் வேளாண் மாணவி, அபர்னா சென்ஸ்ரீ மதிப்புக்கூட்டு பொருள்கள் பற்றியும் தோட்டக்கலை மாணவி, லாவண்யா நீர் மேலாண்மை பற்றியும் விளக்கினார்கள்.

மேல் சாத்தாம்பூரில் இயற்கை இடுபொருள் தயாரிப்புப் பயிற்சி!



நாமக்கல், நவ.4

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரம், மேல் சாத்தாம்பூர் கிராமத்தில் 28.10.26 அன்று, கரூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் இயற்கை இடுபொருள் தயாரிப்புப் பயிற்சியை நடத்தினர்.

இப்பயிற்சியில் பரமத்தி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் டி.சுதா, ATMA பிரதிநிதிகள் ரவீனா மற்றும் ஜோதி, பத்து ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள இயற்கை விவசாயி வேலுசாமி ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்குப் பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கரூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் ஜீவாமிர்தம் தயாரிக்கும் முறை, அதற்குத் தேவையான மூலப்பொருட்கள், அதன் சிறப்புப் பயன்கள் மற்றும் பயிர்களுக்குப் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் எடுத்துரைத் தனர். மேலும், இயற்கை இடுபொருட்களின் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வேளாண்மையில் அவற்றின் பங்கு குறித்தும் விளக்கினர்.

இயற்கை விவசாயி வேலுசாமி தனது அனுபவங்களையும் இயற்கை வேளாண்மை சார்ந்த தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சி இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்கும், விவசாயிகளிடையே இயற்கை இடுபொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

சேலம் மாவட்டத்தில் வரும் ஐந்து நாட்களில் லேசான மழைக்கு வாய்ப்பு

சேலம், நவ.4

சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் நாள்-1 (04.11.26) முதல் நாள்-3 (06.11.26) வரை லேசான மழைக்கும் மற்றும் நாள்-4 (07.11.26) மற்றும் நாள்-5 (08.11.26) மிதமான மழைக்கும் வாய்ப்புள்ளது. பகல் வெப்பம் 32.0° செ. (89.6° பா) க்கு மிகாமலும், இரவு வெப்பம் 25.0° செ. (77.0° பா) ஆகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் கிழக்கு மற்றும் வட கிழக்கு திசையிலிருந்து வீச அதன் வேகம் மணிக்கு 6 முதல் 8 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 60 முதல் 90% மாக நிலவும்.

சேலம் மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களில் சில வட்டாரங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தலாம். தென்னை மரத்தை சுற்றி வட்டப்பாத்திகள் அமைத்து மழை நீரை பயன்படுத்திக்கொள்ளலாம். கனமழை மற்றும் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் வயல்களில் வடிகால் வசதி அமைத்து பயிர் சேதத்தை தவிர்க்கவேண்டும் மற்றும் மழை நீர் வீணாவதை தவிர்த்து அதை சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த வேண்டும்.

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலி களை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (கு.வே.ப.க ஏ.ஏ.எஸ், மேக்தூட் & தாமினி).

வரும் வாரங்களில் மிதமான மழைக்கான வாய்ப்பு உள்ளதால் பூச்சிகொல்லி அல்லது களைக்கொல்லி மருந்துடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும்.

வேளாண் & தோட்டக்கலை பயிர்கள்

தற்போது வடகிழக்கு பருமழை துவங்கியுள்ளதால், அனைத்து வட்டாரங்களிலும் தொடர்ச்சியாக விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. எனவே விவசாயிகள் சாகுபடி செய்துள்ள வயல்களில் தண்ணீர் தேங்காமல் தடுக்கவும், அதிகப்படியான நீரை வெளியேற் றவும், வயலில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். மேலும் அடுத்த ஐந்து நாட்களுக்கு விதைப்பு, நீர்ப்பாசனம்,

உரமிடுதல் மற்றும் ரசாயனங்கள் தெளிப்பதைத் தவிர்க்கவும். ஐந்து மாதங்களுக்கும் மேலான வாழை மரங்கள் சாயாமல் இருக்க மூங்கில் கொண்டு முட்டுக்கொடுக்கவும், கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கரும்பு பயிர்கள் சாயாமல் இருக்க பக்கத்தில் இருக்கும் கரும்பு பயிரின் இலைகளை ஒன்றாகக் கட்டி வைக்க வேண்டும்.

சின்ன வெங்காயம்

நிலவும் மாறுபட்ட காலநிலையில் சின்ன வெங்காயம் நடவு செய்துள்ள விவசாயிகள் சின்ன வெங்காயத்தின் எடை மற்றும் மகசூலை அதிகரிக்க 20 நாட்களுக்கு ஒரு முறை வீதம் நடவு செய்த 2 மாதங்கள் வரை ஏக்கருக்கு 200 கிலோ நன்கு மட்கிய தொழு உரத்துடன் தலா 4 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி, பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் வேம் போன்ற உயிரி இடுபொருட்களை கலந்து தூரில் இடுவதால் வெங்காயத்தின் வளர்ச்சி மேம்படுவதுடன் குமிழ் அழுகல் நோயினைத் தவிர்க்கலாம்.

நிலக்கடலை

முன்பனிக்காலம் துவங்கியுள்ளதால் அதிகாலை நேரங்களில் லேசான பனி தென்படுகிறது. இதன் காரணமாக ஆவணி பட்டத்தில் விதைப்பு செய்துள்ள நிலக்கடலையில் பரவலாக இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் முக்கிய அறிகுறியானது இளம் இலைகளில் நரம்புகள் தவிர மற்ற பகுதிகள் இளம் பச்சையாக மாறும், தீவிர பற்றாக்குறையினால் மஞ்சள் நிறப் பகுதிகளில் பழுப்பு நிறத் திட்டுகள் ஏற்பட்டு இலைகள் முழுவதும் வெளிரிய மஞ்சள் நிறமாக தோற்றமளிக்கும். எனவே இதன் பாதிப்பை நிவர்த்தி செய்ய, 1 சதவீத இரும்பு சல்பேட் கரைசலை இலைவழியாக 10 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். மேலும் பனிப்பொழிவால் நோய் தாக்குவதற்கு வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கையாக கார்பன்டசிம் மற்றும் மேன்கோசெஃப் கலந்த கலவையை ஒரு ஏக்கருக்கு 250 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம்.

பருத்தி

தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில், புரட்டாசி பட்டத்தில் பயிரிட்ட பருத்தி பயிரானது சப்பைப் பிடித்து, பூ பூக்கும் பருவத்தில் உள்ளதால் இளஞ்சிவப்பு காய்ப்புழு தாக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே பருத்தி விவசாயிகள் அதன் பாதிப்பை கட்டுப் படுத்தி பொருளாதார சேதத்தை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புரோப்பனோபாஸ் என்ற இரசாயன பூச்சிக் கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மி. லி என்ற அளவில்

கலந்து சப்பையின் மீது நன்கு படும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.

கால்நடைகளுக்கான மழைக்கால மேலாண்மை முறைகள்

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்கி மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக விட்டு விட்டு லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது. மேலும் அடுத்த சில தினங்களுக்கும் லேசான மழை எதிர் பார்க்கப்படுவதால், இந்த பருவமழைக் காலங்களில் காற்றில் ஈரப் பதம் அதிகமாக இருப்பதாலும், ஆங்காங்கே மழைநீர் தேங்கு வதாலும் கால்நடைகளில் அக ஒட்டுண்ணிகள், ஈக்கள் மற்றும் கொசுக்களின் தாக்கமும் அதிகமாக காணப்படும்.

எனவே, பண்ணையாளர்கள் அவைகளிடமிருந்து கால்நடை களைப் பாதுகாத்துக்கொள்ள அந்தி மாலைப் பொழுதிலும், தண்ணீர் அதிகமாக தேங்கி நிற்கும் குளம் மற்றும் குட்டை போன்ற நீர்ப்பாசன பகுதிகளிலும் மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் கால்நடைகளின் கொட்டகையைச் சுற்றிலும் மழைநீர் ஏதும் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கொட்டகையின் உள்ளே மாலைப் பொழுதில் ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்ட புகைமூட்டம் அல்லது பூச்சிக்கொல்லி கலந்த ரசாயனங்களைக் கொண்டு ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்டலாம்.

மேலும் பருவமழை காலங்களில் இவ்வாறு செய்வதன் மூலம் கால்நடைகளில் ஈக்கள் மற்றும் கொசுக்களின் மூலமாக பரவும் ஒட்டுண்ணி மற்றும் நச்சுயிரி நோய்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.

மேலும் விவரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர் - 636 203, சேலம் மாவட்டம். தொடர்புக்கு : 0427 - 2422550.

விளக்குடி கிராமத்தில் மீன் அமிலம் தயாரித்தல் குறித்த செயல்விளக்கம்

திருவாரூர், நவ.4 -

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ட்பட்ட விளக்குடி கிராமத்தில் RAWE மாணவர்கள் சார்பாக விவசாயி களுக்கு மீன் அமிலம் (Fish Amino Acid – FAA) தயாரித்தல் மற்றும் அதன் வேளாண் பயன்பாடுகள் குறித்து விரிவான செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மீன் கழிவுகள் மற்றும் வெல்லம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மீன் அமிலம் தயாரிக்கும் முறை விளக்கப்பட்டது.



மேலும், இதில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் பயிர்களின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மீன் அமிலத்தைப் பயிர்களுக்குத் தெளிக்கும் முறை, அதன் பயன்பாடுகள் மற்றும் பயன்படுத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இச்செயல்பாட்டின் மூலம் குறைந்த செலவில் இயற்கை வேளாண் இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் இயற்கை வேளாண்மையின் நன்மைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வேளாண்மைக் கல்லூரி மாணவியின் இயற்கை வேளாண் தொழில்நுட்ப செய்முறை விளக்கம்!



நாகப்பட்டினம், நவ.4 நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களின் RAWE (கிராமப்புற வேளாண் பயிற்சித் திட்டம்) திட்டத்தின் கீழ், மன்னார்குடி வட்டாரத்திற்குட்பட்ட உள்ளிக்கோட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கான இயற்கை வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த நேரடி செய்முறை விளக்க நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்திய கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மாணவி அமிர்தஷிவானி, அமிர்தக் கரைசல் தயாரிக்கும் முறை, தென்னை மரங்களுக்கு ஊட்டச்சத்து வழங்க உதவும் எருக்கிலை கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் ஆமணக்குப் புண்ணாக்கைப் பயன்படுத்தி காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்தும் முறை ஆகியவற்றை விவசாயி களின் முன்னிலையில் நேரடியாகச் செய்து காண்பித்தார்.

மேலும், இக்கரைசல்களின் தயாரிப்பு முறைகள், பயன்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

இயற்கையில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் பயிர் ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொள்வது குறித்த இந்தச் செயல் விளக்கம் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், நவ.4 திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகே உள்ள முல்லை நகர் பகுதியில், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த வேளாண் மாணவி சூர்யா றீ, பசுந்தாள் உரம் (Green Manure) மற்றும் பசுந்தழை உரம் (Green Leaf Manure) ஆகிய வற்றின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்க மளித்தார்.

இந்நிகழ்வில், பசுந்தாள் உரப் பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பு மற்றும் பசுந்தழை உரத்திற்குப் பயன்படும் கிளை ரிசிடியா, எருக்கு, வேம்பு போன்ற தாவரங்களின் பயன்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், இவ்வகை இயற்கை உரங்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துதல், மண்ணில் கரிமப் பொருட்களின் அளவை அதிகரித்தல், நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவித்தல், மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிர்களின் ஊட்டச்சத்து கிடைக்கும் தன்மையை அதிகரித்தல் போன்ற பல்வேறு நன்மைகளை வழங்குகின்றன என்பதை விளக்கினார்.

இந்நிகழ்வில் 20 விவசாயிகள் கலந்துகொண்டு பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரத்தின் பயன்பாடுகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்து அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்வு மண் வளப் பாதுகாப்பு மற்றும் இயற்கை வேளாண்மை முறைகள் குறித்த பயனுள்ள தகவல்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்தது.